**செ. கு. எண்: 009** **நாள்: 19.01.2019**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 19.1.2019</u>

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், அரசனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆதிமூலம் என்பவரின் மகன் திரு. ஜீவா என்பவர் தனது வீட்டின் பின்புறம் கிடந்த கம்பிகளை எடுத்து வைக்கும் போது, தாழ்வழுத்த மின் கம்பியில் பட்டு, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சோலைமலையான் என்பவரின் மனைவி திருமதி மலர்விழி என்பவர் மின் கம்பி அறுந்து விழுந்து, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், வெள்ளக்கல் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆரோக்கியராஜ் என்பவரின் மகன் செல்வன் ஜார்ஜ் என்பவர் விளையாடிக் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மண்ணச்சநல்லூர் வட்டம், கல்பாளையம் ரோட்டைச் சேர்ந்த திரு. பெரியசாமி என்பவரின் மகன் திரு. செல்வகுமார் என்பவர் மின்மாற்றியில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், போகம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. மந்திரியப்பன் என்பவரின் மகன் திரு. ஆறுச்சாமி என்பவர் அறுந்து விழுந்த மின்கம்பியை தவறுதலாக தொட்டதினால் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், மேலசின்னணம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பொன்னரியான் என்பவரின் மகன் திரு. ராஜேந்திரன் என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், வீரமார்த்தாண்டன்புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்தையா என்பவரின் மகன் திரு. தேவ அருள் செல்ல பெருமாள் என்பவர் மரக் கிளையை அகற்றும் போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், வெண்ணாவல்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துச்சாமி என்பவரின் மனைவி திருமதி சுசீலா மற்றும் திரு. கருவன்குடியிருப்பை சேர்ந்த திரு. கருப்பையா என்பவரின் மகன் திரு. சக்திவேல் ஆகிய இருவரும் அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், காவலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெகந்நாதன் என்பவரின் மனைவி திருமதி மூக்காயி மின் கம்பி அறுந்து விழுந்து, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஒரத்தநாடு வட்டம், பேய்கரும்பன்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. குழந்தைசாமி என்பவரின் மகன் திரு. ஆறுமுகம் என்பவர் விவசாய நிலத்திற்கு சென்ற போது, அறுந்து கிடந்த மின் கம்பியை எதிர்பாராதவிதமாக தொட்டதில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், அழகிரிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜி என்பவரின் மகன் திரு. குமார் என்பவர் தனது விவசாய நிலத்திற்கு சென்ற போது, அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், ஆலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. டேனியல் என்பவரின் மகன் திரு. ஏசுதாஸ் என்பவர் கிராம துணை மின் நிலையத்தில் பாராமரிப்பு பணி மேற்கொண்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மகாதானபுரம் வடக்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. சக்திவேல் என்பவரின் மகன் திரு. தேக்கமலை என்பவர் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

குளித்தலை வட்டம், சிங்காரத் தோப்பைச் சேர்ந்த திரு. நாசன் உசேன் என்பவரின் மகன் திரு. இம்ரான்கான் என்பவர் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், எறையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பூமாலை என்பவரின் மகன் திரு. சுப்ரமணியன் என்பவர் மாடு மேய்த்துக் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், ஜெய்னூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரகு என்பவரின் மகன் செல்வன் சந்தீப் என்பவர் அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், இடையத்தாங்குடி மஜிரா, வைப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சமுத்திரம் என்பவரின் மகன் திரு. சிவா என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட பல்வேறு துயரச் சம்பவங்களில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த **18** நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த **18 நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**